2022 மே 10]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏரியில் 3 மாதங்களுக்கு கூட தண்ணீர் இருக்காது. எப்போதாவதுதான் தண்ணீர் வரும்; உடனே போய்விடும். பிறகு எவ்வாறு அவ்விடத்தில் சுற்றுலாத்தலம் அமைக்க முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. கவன ஈர்ப்பு

தென்காசி தொகுதி, வீரகேரளம்புதூர், நவநீதகிருஷ்ணசாமி கோயில், குடமுழுக்கு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி வீரகேரளம்புதூரில் உள்ள பழமைவாய்ந்த நவநீதகிருஷ்ணசாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் 1918 ஆம் ஆண்டில் நடைபெற்றதாம். அதன் பிறகு சுமார் 103 ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடத்தப் பெறாமல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், நிகழ்ச்சி நிரலில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன் என்ற அந்த ஒரு வரியை மட்டும் படியுங்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி தென்காசியிலுள்ள வீரகேரளம்புதூரில் உள்ள நவநீதகிருஷ்ணசாமி திருக்கோயில் திருப்பணிகள்*

எப்பொழுது நடைபெறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசை மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தென்காசி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு நவநீதகிருஷ்ணசாமி திருக்கோயில், நூற்றாண்டிற்கும் மேற்பட்ட பழமை வாய்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் சட்டப்பிரிவு 46(ii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியலைச் சார்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. பசலி 1428-க்கான சகாய நிர்ணயத் தொகை ரூ.2,96,750/- ஆகும்.

இத்திருக்கோயிலுக்கு திருக்குடமுழுக்கு நடைபெற்று 100 ஆண்டுகளுக்கும் மேலாகியுள்ள நிலையில், தற்போது இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் மேற்கொண்டு பழமை மாறாமல் புதுப்பிக்கும் பொருட்டு தொல்லியல் வல்லுநரால் ஆய்வு செய்யப்பட்டு கருத்துரு பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மண்டல வல்லுநர் குழு கூட்ட பரிசீலனையில் வைக்கப்படவுள்ளது. அதன் பின்னர், மாநில அளவிலான வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு வைத்து, அதன் வழிகாட்டுதல்களின்படி மதிப்பீடு தயார் செய்து உபயதாரர் மற்றும் துறை நிதி பெற்று திருப்பணி வேலைகள் துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள், "நான் விவர அறிக்கையைப் படித்தேன், அதில் சரியான பதில் எனக்குக் கிடைக்கவில்லை. அறிக்கையை விவரமாகச் சொல்லுங்கள்" என்று கேளுங்கள்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவர

2022 மே 10] *[திரு. S. பழனி நாடார்]*

அறிக்கையைப் படித்துத் தெரிந்துகொண்டேன். எனது தென்காசி தொகுதியில் வீரகேரளம்புதூரில் உள்ள மிகப் பழமை வாய்ந்த அருள்மிகு நவநீதகிருஷ்ணசாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் 1918 ஆம் ஆண்டு நடைபெற்றதாம். சுமார் 103 ஆண்டுகள் கும்பாபிஷேகம் நடைபெறாத நிலை இருக்கின்றது. மேலும், குற்றாலம், தென்காசி, காசி விசுவநாதர் திருக்கோயிலிலும் கும்பாபிஷேகம் நடைபெறாமல் இருக்கின்றது. எனவே, மேற்கண்ட திருக்கோயில்களில் விரைவில் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய நவநீதகிருஷ்ணசாமி திருக்கோயில் தெய்வீக அதிர்வுகள் நிறைந்த கோயில். சித்ரா நதிக்கரை ஓரத்திலே அமைந்திருக்கின்ற அந்தத் திருக்கோயில், பாண்டிய மன்னர்கள் காலத்தில் மதுரைக்குத் தெற்கே, வைணவ ஸ்தலங்களில் முதல் வைணவ ஸ்தலமாக உருவாக்கப்பட்ட திருக்கோயில். அருள் நிறைந்திருக்கின்ற அந்தத் திருக்கோயிலில், 'தமிழகத்தின் குருவாயூரப்பன்' என்று பக்தர்கள் போற்றி வணங்குகின்ற அந்தத் திருக்கோயிலில் 103 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றது என்பது உண்மைதான்.*

இதை அறிந்துதான் இந்து சமய அறநிலையத் துறை உடனே அந்தத் திருக்கோயிலை புனரமைப்பு செய்து திருப்பணிகள் மேற்கொள்வதற்காக, தற்போது தொல்லியல் துறையினுடைய கருத்துருவைப் பெற்றிருக்கின்றது; அடுத்தபடியாக, மண்டல வல்லுநர் குழுவிற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது; குழுவினுடைய கருத்துரு பெறப்பட்ட பிறகு, மாநில அளவிலான வல்லுநர் குழுவின் கருத்துரு பெறப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டு உடனடியாக திருப்பணிகளை மேற்கொள்வதற்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை விரைவாகப் பணியினை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2022 மே 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. மேலும், தென்காசி தொகுதியில் உள்ள இந்து கோயில்களையெல்லாம் புனரமைப்பு செய்து, இந்த ஆண்டே குடமுழுக்கு நடத்துவதற்கு வாய்ப்பு உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட குற்றால திருச்சபை திருக்கோயிலுக்குச் செப்புத்தகடு பதிக்கின்ற பணி மற்றும் திருப்பணிகளுக்காக 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இதுநாள்வரையில் 626 கோடி ரூபாய் செலவில் 887 திருக்கோயில்கள், திருப்பணிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அனைத்துத் திருக்கோயில்களும் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 4*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு. . . (குறுக்கீடுகள்) நேரம் ஆகிவிட்டது. நிறைய பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு கேள்வி நேரத்தில் மட்டுமே ஒரே அமைச்சரிடம் 15 கேள்விகள் கேட்க அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) நிறைய விஷயங்களைப் பதிவு செய்தாகிவிட்டது. போதும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். எல்லோரும் உட்காருங்கள், சொல்கிறேன். உட்காருங்கள். இது முடியட்டும், சொல்கிறேன். (குறுக்கீடு) கவன ஈர்ப்பிற்கு வந்துவிட்டோம். (குறுக்கீடு) உங்களுக்குத் தெரியுமே! (குறுக்கீடுகள்) நிகழ்ச்சி நிரல் முடிந்து, எல்லாமே முடிந்துவிட்டது. தேவையான அளவிற்கு எவ்வளவோ எடுத்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) நிகழ்ச்சி நிரலுக்கு வந்ததற்கு பிறகு reverse போகச் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) போதும். நான் பார்த்தேன். Zero*

2022 மே 10] [பேரவைத் தலைவர்]

Hour-ல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுவார்களா என்று பார்த்தேன். இல்லையென்றவுடன் அப்படியே அடுத்ததற்குப் போய்விட்டேன். (குறுக்கீடுகள்) போதும். இன்றைக்குப் போதும். இருக்கட்டும். (குறுக்கீடுகள்) இருக்கட்டும். எடுத்துக்கொள்ளலாம். இருக்கட்டும். (குறுக்கீடு) போதுமே! (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்

(அ) கோவை, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் வாழை மரங்கள் சூறாவளிக் காற்றினால் சேதம், இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, ஒரு வார்த்தை பதிவு செய்யுங்கள். பதில் யாருக்கும் இல்லை. ஒரு வார்த்தை பதிவு மட்டும் செய்யுங்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற சூறாவளிக் காற்றில் வாழைகள் பல பகுதிகளில், கோயம்புத்தூர், ஈரோடு, தருமபுரி, சேலம், தூத்துக்குடி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் பெரும் சேதம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தேனியை விட்டுவிடாதீர்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பகுதி.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *தேனி பகுதிகளில் பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கிற பகுதிகளில், பாரத பிரதமர் காப்பீட்டுத் திட்டத்தில் பிர்க்கா அளவிலே வாழை மரங்கள் விழுந்தால் மட்டும்தான் அதற்குக் காப்பீடுகள் வழங்க இயலும். ஆகவே, இதுபோன்று பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கக்கூடிய விவசாயிகளினுடைய நலன் கருதி, தமிழக அரசு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

(ஆ) நன்னிலம் தொகுதி, விஷ்ணுபுரம் ஊராட்சி, சாலை விரிவாக்கத்தின்போது பாதிக்கப்பட்ட குடும்பங்கள், மீள்குடியமர்வு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*